ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)





சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
21, கார்த்திகை 2025

Date:
07, December 2025

www.vedaneri.org

வகுப்பு 16

# அறத்துப்பால் – இல்லறவியல்

## அதிகாரம் : 10

## இனியவை கூறல்





(நன்மையைத் தரும் நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்)

கேட்பவர் மனதில் மகிழ்ச்சி உண்டாகுமாறு அன்பான, உண்மையான, இனிய சொற்களைப் பேசுதல் விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதது



குறள்: 1

இன்சொல் இலக்கணம்

குறள்கள்: 2, 3

இன்சொல் கூறலின் சிறப்பு - மேலான இன்பத்தைக் கொடுக்கும்.

குறள்கள்: 4, 5

இன்மைப் பயன் - வறுமை வராது, உண்மையான அழகு தோன்றும்.

குறள்: 6

மறுமைப் பயன் - பாபம் குறையுமாறு அறம் பெருகும்.

குறள்கள்: 7, 8

இருமையிலும் கிடைக்கும் பயன் - இம்மை மறுமை என இருமையிலும் இன்பம் கிடைக்கும்.



குறள்கள்: 9, 10

கடுஞ்சொல் கூறலின் குற்றம் - பாபம் வரும்.

# 1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
# செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

அறத்தினை அறிந்தவருடைய வாயிலிருந்து வருகின்ற அன்பு கலந்த வஞ்சனை இல்லாத சொற்களே இன்சொல் ஆகும்.

ஆல் = (இன்சொலால் என்பதிலுள்ள ஆல்) அசை நிலை

ஈரம் அளைஇ = அன்போடு கலத்தல் – மனதிலுள்ள அன்பினை வெளிப்படுத்துதல்

படிறு இன்மை = பொய்யின்மை – வாய்மை – வஞ்சனையின்மை

செம்பொருள் = சிறப்புடைய பொருள் = அறம். உண்மையை அறிந்தவருக்கு அறமே மேம்பட்ட பொருளாகும்.

வாய்ச் சொல் = சொல் என்பதே போதுமானதாக இருக்க வாய் எனக் கூட்டிக் கூறியது தீயசொல் இல்லா என்பதனைக் குறிக்கும் குறிப்பு. இதற்கு விதப்புக் கிளவி எனப் பெயர். விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும் – தொல்காப்பியச் சூத்திரம்,



கடுமையில்லாத அறமும் அன்பும் உண்மையும் உடைய சொற்களே இன்சொற்களாகும்.

இனியவை கூறலுக்கு இலக்கணம் கூறப்பட்டது.

# ௨. அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து
# இன்சொலன் ஆகப் பெறின்.

(பார்த்தவுடன்) முகமலர்ச்சி உடையவனாகவும் இனிய சொற்களை உடையவாகவும் ஒருவன் இருக்கப்பெற்றால் அது மனமகிழ்ந்து ஒருவனுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதை விட நல்லதாகும்.

பெறுபவனுக்கு பொருள் தரும் இன்பத்தை விட அன்போடு கூடிய இன்சொல் தரும் இன்பம் மேலானது.

ஈதல் என்பது பொருள் இருத்தல், இன்மையைச் சார்ந்த புறவிஷயம். அன்புடைமையும் இன்சொல்லும் அகம் சார்ந்தது. ஆகவே, அறத்தைக் கடைப்பிடிக்க விரும்புபவன் அகத்தில் அன்பையும் வாக்கில் இனிமையையும் வளர்த்துக் கொளல் வேண்டும்.



## 3. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
## இன்சொ லினதே அறம்.

(பார்த்தவுடன்) முகமலர்ச்சி காட்டி இனிதாகப் பார்த்து (அருகில் வந்தவுடன்) மனத்திலிருந்து வரும் இனிய சொற்களைச் சொல்லுதலே அறம் ஆகும்.

மலர்ந்த முகமும் கனிவான பார்வையும் இனிமையான பேச்சும் விருந்தோம்பலில் உணவு முதலானவை கொடுப்பதற்கு முன்னரே விருந்தினரை மகிழ்விப்பதால் சிறந்ததாகும்.



# 4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
# இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு.

எல்லாருடையமனதிலும் மகிழ்ச்சியை மிகச் செய்கின்ற இனிய பேச்சினை உடையவருக்கு துன்பத்தை மிகச் செய்யும் வறுமையானது இல்லையாகும்.

துவ்வாமை = அனுபவியாமை – அனுபவிக்கப் பொருள் இல்லாமை – வறுமை

இனிய சொற்களை எப்போதும் எல்லாரிடத்திலும் பேசும் அன்புடையவர்களுக்கு அனைவரும் நண்பராக இருப்பர் என்பதால் வறுமை இருக்காது.

நினைவு கூர்க:

அன்பீனும் ஆர்வ முடைமை அதுஈனும்

நண்பென்னும் நாடாச் சிறப்பு (குறள் 74)



# 5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற.

பணிவுடையவாகவும் இனிய சொற்களை உடையவனாகவும் ஆகுதலே ஒரு மனிதனுக்கு (சிறந்த) அணிகலனாகும். (புறத்தில் அணியும்) மற்றவை அணிகலன்கள் ஆகாது.

இன்சொல் உடையவனாக இருப்பதற்குத் துணையாக இருப்பதனால் பணிவு சேர்த்துக்கொள்ளப்பட்டது.

அணிகலன்கள் ஒருவனை புறத்தில் தாற்காலிகமாக அழகுபடுத்துபவை. பணிவும் இன்சொலும் உண்மையான அழகை வெளிப்படுத்துபவை.



இவை இரண்டு பாட்டாலும் இம்மைப் பயன் கூறப்பட்டது.

# 6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்.

(கருத்தால் பிறருக்கு) நன்மையைத் தரும் சொற்களை மனத்தினால் ஆராய்ந்து அவற்றை இனிமையான வார்த்தைகளால் ஒருவன் கூறினால் அவனுடைய பாபம் குறைய புண்ணியம் பெருகும்.



நல்லவை = நன்மை = ஹிதம்

நாடி = மனதால் ஆராய்ந்து

அல்லவை = பாபம் – துன்பம்

அறம் = புண்ணியம் – இன்பம்

பிறருக்கு நன்மையைத் தரும் விஷயங்களை ஆராய்ந்து இனிமையாகக் கூறினால் பாபம் குறைந்து புண்ணியம் பெருகும்.

நன்மையைத் தராத இனிய சொற்களும் நன்மையைத் தருவனவாக இருந்தாலும் இனிமையில்லாத சொற்களும் அறம் ஆகா என்பதும் உணரத்தக்கது.

இதனால் மறுமைப்பயன் கூறப்பட்டது.

# 7. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
# பண்பின் தலைப்பிரியாச் சொல்.

(அர்த்தத்தால்) பிறருக்கு நன்மையைக் கொடுத்து இனிமைக் குணத்திலிருந்து மாறாத சொற்கள் ஒருவருக்கு (இம்மைக்கு) உலகோடு இணங்கி வாழ்தலையும் (மறுமைக்கு) புண்ணியத்தையும் தரும்.

நயன் = நீதி – உலகத்தோடு இணங்கி வாழ்தல்.

நன்றி = நன்மை – அறம் – இன்பத்தைத் தரும் புண்ணியம்.

பண்பு – இனிமை (இனியவைகூறல் எனும் அதிகாரமாதலால் இங்கு இனிமை எனும் நற்பண்பை எடுத்துக் கொள்ள வேண்டும்.)



# 8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும்.


(பிறருக்கு) துன்பத்தைத் தராத இனிய சொற்கள் ஒருவனுக்கு மறுமை, இம்மை எனும் இருமையிலும் இன்பத்தைக் கொடுக்கும்.

சிறுமை = துன்பம் – கடுஞ்சொல்லால் வருவது.

மறுமையின்பம் – மறுபிறவியில் அடையும் மிகுதியான இன்பம்.

இம்மை இன்பம் – இனிய அன்பான உண்மையான பேச்சினால் உலகம் வசப்படுமாதலால் இவ்வாழ்க்கைக்குத் தேவையான எல்லா நலங்களையும் பெற்று அடையும் இன்பம்.

இவை இரண்டு பாட்டாலும் இருமைப்பயன்களும் ஒருசேர அடைதல் உறுதி செய்யப்பட்டது.



# 9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
# வன்சொல் வழங்கு வது.

பிறர் கூறிய இனிய சொற்கள் தனக்கு இன்பம் தருவதை அனுபவித்து அறிகிறவன், கடுஞ்சொற்களை (பிறரிடத்து) கூறுவது என்ன பயனைக் கருதியோ?



இனிது – இன்பம் (குறிப்பு வினையாலனையும் பெயர்)

வன்சொல் – கடுஞ்சொல்.

கடுஞ்சொல் பிறருக்கும் துன்பம் தருமாதலால் கடுஞ்சொல்லைச் சொல்லலாகாது என்பது கருத்து.

# 10. இனிய உளவாக இன்னாத கூறல்
# கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(புண்ணியத்தை உண்டாக்கும்) இனிய சொற்கள் இருக்க (பாபத்தை உண்டாக்கும்) கடுஞ்சொற்களை ஒருவன் பேசுதல் இனிய கனிகள் தன் கையில் இருக்க கசப்பான காய்களை உண்பது போலாகும்.

இனிய சொற்கள் பிறருக்கு இன்பத்தைத் தரும் ஆதலால் புண்ணியத்தை உண்டாக்கும்.
கடுஞ்சொற்கள் பிறருக்கு துன்பத்தைத் தரும் ஆதலால் பாபத்தை உண்டாக்கும்.

கடுஞ்சொல் சொல்லுதல் முடிவில் தனக்கே பாபமாக வந்து துன்பத்தைத் தரும் என்பதாம்.

இவை இரண்டு பாட்டாலும் கடுஞ்சொல் சொல்லுதலின் குற்றம் கூறப்பட்டது.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி

வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்

உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே

வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami om karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910 www.vedaneri.org vedapuricamps@gmail.com